
October 2019

# Coastal Watch

## கடலோரப் பார்வை



## Coastal Livelihood Matters

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 4 October 2019

Welcome to Coastal Watch!

Coastal watch shares the stories about coastal life styles. Coastal community shares their own life experiences. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews Project titled "Voice of Vulnerable". It is proposed to release 9 magazines in the one year from April 2019 to March 2020. This is the fourth issue of the magazine titled "Coastal Watch".

The articles in this magazine are not written by journalist or expert in the media field. The articles are written by community journalism volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This issue carries ten articles, which talks about the various coastal livelihoods viz., fresh water aquaculture, prawn culture, livestock farming, poultry farming and agriculture. There are articles talk about prevailing village market system, fishing festival, puberty celebration among coastal community, alcohol consumption habit among fishermen and Point Calimere wildlife and bird sanctuary.

Thanks in advance for your support!

Keep Read and Reflect….

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. அலமும் மீன் பிடிக்கும் களமும்... 1

2. இறால் பண்ணையும் வளமான வாழ்வாதாரமே! 3

3. ஆடு, மாடுகள் எனக்கு, நான் பெற்ற பிள்ளைகள் மாதிரி... 4

4. கோழி வளர்ப்பு பெண்களுக்கான சிறுதொழில்... 6

5. நானும் ஓர் விவசாயியே.. ஓர் பெண் விவசாயியின் அறைகூவல்... 7

6. எங்க ஊரு அமேசான்... 9

7. மஞ்சள் நீராட்டு விழா... 11

8. கடலுக்குள் செல்வோரின் குடிப்பழக்கம்... 12

9. எங்கள் ஊர் மீன்பிடித் திருவிழா... 14

10. கோடியக்கரை ... 15

**DHAN Foundation**
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org

# அலமும் மீன் பிடிக்கும் களமும்...

காளிமுத்து *

பொதுவாக, மீன்பிடிப்பு என்றவுடன், கடலில் படகை எடுத்துக் கொண்டு சென்று மீன்பிடித்து வரும் கடினமான தொழிலை செய்து வரும் மீனவ சமுதாயமே நம் கண் முன் தோன்றி மறையும். ஆனால், மீனவர்கள் சமுதாயத்தைச் சாராத எத்தனையோ பிற ஏழை குடும்பங்களும் இருக்கின்றன. அவர்கள் ஆறுகளிலும், ஏரிகளிலும் மீன்பிடித்தலை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். அவர்கள் வாழ்வியல் முறையை பற்றி அலசுகிறது இந்த கட்டுரை.

பொதுவாக, கனமழை பெய்யும் போது, மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்வது கிடையாது, ஆனால் இங்கு நாம் காண இருக்கும் குடும்பங்களை போன்ற ஏழை மீனவ குடும்பங்களுக்கு கன மழை பெய்து ஆறுகளும், ஏரிகளும் நிறைந்தால் தான் வாழ்வாதாரம். அத்தகைய ஏழை மீன்பிடித் தொழிலாளர் தனது வாழ்வியல் முறை பற்றி நம்மிடையே பகிர்ந்து கொள்கிறார்.

என் பெயர் காளிமுத்து, நான் வேட்டைகாரனிருப்பு கிராமம், நாகப்பட்டிணம் கிராமத்தில் வாழ்ந்து வருகிறேன். எங்கள் குடும்பம், ஆத்துலையும், அலத்துலையும் மீன் பிடித்து வாழ்க்கை நடத்துகிறோம். அலம் என்பது ஒரு ஏரி போல, எங்க ஊர்ல அலம்னு சொல்லுவார்கள். அதுல மழைக்காலத்துல மட்டும்தான் தண்ணீர் அதிகளவில் இருக்கும். எங்க ஊர்ல உள்ள அலத்தில் இறால், மீன், நண்டு அதிகளவில் இருக்கும். இவற்றை ஆற்று மீன், ஆற்று நண்டு, ஆற்றுஇறால் என்று கூறுவார்கள். இவைகள் கடல் மீனைவிட மாறுபட்டு இருக்கும். முதலில் மழைக்காலம் தொடங்கியவுடன் இந்த அலங்களில் மீன்கள் ஏறாது. நீண்ட நாட்கள் கனமழை பெய்து, ஆறு நிரம்பி கடலிலிருந்து தண்ணீர் அதிகளவில் ஏறி அலம் நிரம்பும் அந்த சமயத்தில் கடலில் உள்ள மீன்கள் இறால்கள், நண்டுகள் அலத்திற்கு ஏறும். குறிப்பிட்டு நாங்கள் பிடிக்கும் மீன்கள் என்றால் மடாகண்டை, ஆக்களிச்சான், பாலாகண்டை



* காளிமுத்து, வேட்டைக்காரனிருப்பு



போன்றவையே, அதிலும், மடாகண்டை மீன் உடனே வீணாகிடாது எனவே அதை ஐஸ்ஸில் பேக்கிங் செய்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் வழக்கமும் இருக்கிறது. இந்த செயல்பாடுகள் மழைக்காலங்களில் மட்டுமே நடக்கின்றன.

ஆற்றில் மீன் பிடிக்க இறால் வலையை பயன்படுத்துவோம். இறால் வலை தண்ணீர் அதிகம் இருக்கும்போது மட்டும் பயன்படுத்துவோம். ஆற்றில், அதிகளவில் தண்ணீர் இருக்கும் போது போட் உள்ளவர்கள் போட் வைத்து மீன் பிடிப்பார்கள், போட்டிற்கு செலவுகள் அதிகமாகும், எங்களால் செலவு செய்ய இயலாத காரணத்தால், நான் எனக்கு தண்ணீர் கழுத்தளவிற்கு இருக்கும் இடம் வரை சென்று வலை போட்டு மீன் பிடிப்பேன். தண்ணீர் குறையும்போது கையால் தடவிப் பிடிப்பேன். கடல் மீன்பிடி அளவிற்கு லாபம் கிடைக்காது, எனினும், ஏதோ வாழ்க்கை நடத்தலாம். ஆற்று மீன் குறைந்த அளவில் கிடைப்பதால் விலை அதிகமாக இருக்கும். நண்டுகள் பெரியளவில் பிடிக்கமாட்டோம். எப்போதுமே ஆற்று நண்டு விலை அதிகமாக இருக்கும் மழைக்காலம் முடிந்தும் ஆறுகளில் தண்ணீர் இருக்கும். இப்படியாக மழைக்காலம் முடிந்தும் ஆற்றில் மீன்பிடித்து வாழ்ந்து வருகிறோம்.

தனது உடல் உழைப்பை மட்டுமே நம்பி அலங்களிலும், ஆறுகளிலும் மீனவர்கள் குடும்பங்களுக்கு, ஆண்டு முழுவதும் வேலையும் வருமானமும் இருப்பதில்லை, மழைகாலங்களில் மட்டுமே அதிக அளவில் மீன்கள் அலங்களிலும், ஆற்றிலும் பிடித்து விற்கப்படுகின்றன.



# இறால் பண்ணையும் வளமான வாழ்வாதாரமே!

சுசிலா *

என் பெயர் குமார், நான் இறால் பண்ணை அமைத்து வளர்த்து வருகிறேன். இப்பண்ணை வைப்பதற்கு அதிக அளவிலான முதலீடு தேவைப்படுகிறது. முதலில் தேவைப்படும்; இடத்தை சுத்தம் செய்து, அந்த இடத்தில் தொட்டி அமைக்கப்படுகிறது. அதன் பிறகு தொட்டியை டிராக்டரில் உள்ள ஏர் கலப்பின் மூலம் உழுது, கீழ் பகுதிகளில் சுண்ணாம்பு அடித்து மீண்டும் ஏர் கலப்பை பயன்படுத்தி மண்ணில் உள்ள நுண்கிருமிகள் சுத்தம் செய்யப்படுகிறது. மீண்டும் தொட்டி சமன் செய்யப்படுகிறது.

அதன் பிறகு தொட்டிகள் போர்கள் மூலம் தண்ணீர் ஏற்றப்படுவதால் தொட்டிக்குள் இதர உயிரிகள் செல்ல வாய்ப்புகள் குறைவு. மோட்டார் மூலம் கடல் மற்றும் ஆறுகளில் உள்ள நீரை இன்ஜின் மூலம் ஏற்றப்படும் போது அதில் அதிக நுண்ணுயிர்கள் தொட்டிக்குள் செல்வதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆதலால் எவ்வகை தண்ணீரை பயன்படுத்தினாலும் அவற்றில் உள்ள நுண்கிருமிகளை அழிப்பதற்கு கெவி பிளிச்சிங் செய்யப்படுகிறது. இதன் மூலம் தொட்டிக்குள் நுண்கிருமிகள் வந்தாலும் அளிக்கப்படுகிறது. தொட்டிக்களின் உயரத்தை பொறுத்து தொட்டிக்குள் தண்ணீர் ஏற்றப்படுகிறது. அதன் பிறகு ஏரோட்டர்களை பயன்படுத்தி தினமும் தண்ணீர் ஓடவிடப்படுகிறது. தொட்டிகளின் அளவைப் பொருத்து இறால் குஞ்சிகளான சீடுகள் தகுந்த பாதுகாப்பான முறையில் கொண்டு வரப்பட்டு தொட்டிகளுக்குள் தேவையான அளவில் விடப்படுகிறது.

எங்கள் பகுதியில் இறால் குஞ்கள் மரக்காணம் பகுதியிலிருந்து பெறப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு 2 இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்படகின்றன, ஒரு ஹக்டேர் அளிவிலான தொட்டிக்கு சுமார் 4 இலட்சம் இறால் குஞ்சுகள் வளர்ப்பதற்காக விடப்படுகின்றன. ஒரு ஹக்டேரக்கு சுமார் 10 இலட்சம் வரை செலவாகும். இறால் வளர்ப்பிற்கு பருவநிலை என்பது கிடையாது, எப்போதும் வேண்டுமென்றாலும் வளர்க்கலாம். இறால் குஞ்சுகள் ஊசி அளவிலேயே உள்ளன. அது விற்பனை செய்யும் அளவிற்கு வளர்வதற்கு சுமார் 120 நாட்கள் தேவைப்படுகின்றன.

எங்கள் பகுதியில் இறால் வளர்ப்பில் பெரும்பாலும் வானமி மற்றும் டைகர் வகைகளே உள்ளன. வானமி இறால் வெள்ளையாகவும், டைகர் இறால் கருப்பாகவும் இருக்கும். இதில் டைகர் இறால் ஆற்றிலேயும் கிடைக்கும். பெரிய அளவில் குளம்பாத்திகட்டி இறால் வளர்பவர்கள் அதற்கு தொடர்ந்து உணவளிக்க, பராமரிக்க தினக்கூலிக்கு ஆட்கள் வைத்து, அவர்கள் சுமார் 4 மாதங்கள் அங்கேயே தங்கி வேலைபார்த்து வருகின்றனர்.

* **சுசிலா**, விழுந்தமாவடி

# ஆடு, மாடுகள் எனக்கு, நான் பெற்ற பிள்ளைகள் மாதிரி...

வினிதா *



எனது பெயர் பாலசுந்தரி. நான் நாகப்பட்டினம் மாவட்டம் கன்னித்தோப்பு கிராமத்தில் கடந்த இருபது வருடங்களாக ஆடு, மாடுகளை எனது பெற்ற பிள்ளைகளாக வளர்த்து வருகிறேன். தற்போது என்னிடம் இருபது ஆடுகளும் ஐந்து மாடுகளும் இருக்கின்றன. அவை வாயில்லாத ஜீவன்கள், அதனால் என் உயிராக அவற்றை வளர்த்து வருகிறேன்.

அவற்றிற்கு தேவையான கடலைப்புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு, தீவனப்புல்லு போன்ற வகையான தீவனங்களை உணவாக அளித்து வருகிறேன். மேலும், சாதம் வடித்த தண்ணீரை எடுத்து அதில் கடலைபுண்ணாக்கை ஊற வைத்து அதையும் உணவாக கொடுக்கிறேன். அது மட்டும் அல்லாமல் அரிசி; அரைக்கும் போது அதில் இருக்கும் நொய் அரிசியை கஞ்சி காய்ச்சி வைக்கிறோம். மேலும், மானாவாரி நிலங்களில் புல்லு அறுத்து கொண்டு வந்து கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கிறோம்.

எங்கள் கிராமத்தின் வயல் நிலங்களில் 6 மாதத்திற்கு ஏதேனும் பயிர்களை சாகுபடி செய்வார்கள்;, அதன் பிறகு வயல்களில் ஆடு, மாடு மேய்க்க அனுமதிப்பார்கள். இதனால், ஆடு, மாடுகள் போடுகின்ற சாணம் வயல்களுக்கு உரமாகிறது. வீடுகளில் ஆடு, மாடுகள் போடுகின்ற சாணத்தை சேமித்து வைத்து உரமாகவும் வயல்களுக்கு பயன்படுத்தும் வழக்கமும் உள்ளது. வயல் இல்லாதவர்கள் ஆடு மற்றும் மாடு சாணங்களை விற்றும் பணமாக்குவார்கள்.

பொங்கல் திருவிழா, ஆடு மாடுகளுக்கும் ஒரு பெரிய திருவிழாவே. பொங்கல் திருநாள் அன்று, நமது விவசாய வாழ்வாதாரத்திற்கு உறுதணையாக இருக்கும் சூரியனை வணங்குவது போல், மாட்டுப்பொங்கல் அன்று, விவசாயத்திற்கு இணை வாழ்வாதாரமாகவும், துணை வாழ்வாதரமாகவும் இருக்கும் ஆடு, மாடுகளை குளிப்பாட்டி காவி வண்ணம் பூசி மாலை அணிந்து அவைகளுக்கு பொங்கல் செய்து தயிர் ஊற்றி வாழைப்பழம் வைத்து பாட்டுபாடி பொங்கலோ பொங்கல்னு கூக்குறலிட்டு படையல் செய்வார்கள்.

* **வினிதா**, விழுந்தமாவடி

எங்கள் பகுதியில் பொதுவாக ஒரு நம்பிக்கை உண்டு, ஆடு, மாடு வளர்க்கின்றவர்களுக்கு ஏதாவது கெட்ட நேரம் வந்தால், அது அவர்களை பாதிக்கா வண்ணம், அவைகள் அவற்றை வாங்கி கொண்டு இறந்து விடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதனாலேயே, அனைவரும் ஆடு, மாடுகளை அன்பாக அரவணைத்து வீட்டில் ஒரு நபர் போன்று வளர்க்கிறோம். வீடுகளில் வளர்க்கப்படும் ஆடு மாடுகள் என்றால், பால்வரத்து குறைவாகத்தான் இருக்கும். ஆதலால் வீட்டிற்குத் தேவையான பாலை வைத்துக் கொண்டு, மீதமுள்ள பாலை அருகில் உள்ள வீடுகளுக்கும் கடைகளுக்கும் கொடுப்பார்கள். ஆனால் நான் அருகிலுள்ள கடைகளுக்கு எல்லாம் பால் விற்பனை செய்ய மாட்டேன். அதற்கு பதிலாக பால் தேவைப்படும் வீடுகளுக்கு மட்டும் விற்பனை செய்து வருகிறேன். எங்கள் ஊரில் பெரும்பாலான மக்களுக்கு நான் விற்பனை செய்யும் மாட்டுப் பாலை அவர்களின் வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு குடிக்கவும், தேனீர் போடவும் எஞ்சிய பாலை தயிர் மற்றும் மோர் ஆக்கவும் பயன்படுத்துகின்றனர்.

ஆடுகளை பண்ணைகளாகவும் வளர்க்கும் வழக்கம் உள்ளது. ஒரு பண்ணையில் சுமார் 100 முதல் 150 ஆடுகள் வரை இருக்கும். மாடுகளையும் பண்ணைகளாக வைத்து வளர்க்கும் வழக்கம் உள்ளது. ஆனால் மாட்டு பண்ணைகளில் மாடுகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். ஆடுகள் ஒரே முறையில் மூன்று முதல் நான்கு குட்டிகளை ஈனும். ஆனால் மாடு அப்படியில்லை ஒரு முறை ஒரு கன்றை மட்டுமே ஈன்றெடுக்கும். ஆதலால் மாடுகளின் எண்ணிக்கை பண்ணையில் சற்று குறைவாகவே இருக்கும்.

பண்ணை முறையில் பால் விற்பனை என்று பார்த்தால், பண்ணையிலிருந்து ஊரில் உள்ள தேனீர் கடைகள் மற்றும் பால் தேவை அதிகம் உள்ள வீடுகளில் கொடுப்பார்கள். மேலும் சில பால் உற்பத்தியாளர்கள் அருகே உள்ள ஊர்களில் கடைகளுக்கு சென்று விற்பனை செய்வார்கள். வருமானம் என்று பார்க்கப்போனால், ஒரு மாட்டிலிருந்து எனக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 4 முதல் 5 லிட்டர் பால் கிடைக்கும். இப்படியாக ஒரு நாளைக்கு எனது ஐந்து மாடுகளிடம் இருந்து சுமார் 20 முதல் 22 லிட்டர் வரை எனக்கு பால் கிடைக்கும். நான் எங்கள் ஊரில் ஒரு லிட்டர் மாட்டு பாலை 40 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறேன். இதன்மூலம் எனக்கு தினமும் 800 ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். இதில் கால்நடைகளுக்கு தேவையான தீவனச் செலவுகள் போக எனக்கு 400 ரூபாய் நிகர லாபமாக தினமும் கிடைக்கும்.

ஆடுகளை விற்காமல் வார ஆடுகளாகவும் வளர்க்க கொடுப்பார்கள். அதாவது வாரமாக கொடுத்த ஆடு குட்டி ஈன்றதும், அது ஆண் குட்டியாக இருந்தால் அதனை விற்று அதில் வரும் பணத்தை ஆளுக்கு பாதி எடுத்துக் கொள்வார்கள். ஆடு, மாடுகளே எங்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கிறது. எங்களுக்கு குல தெய்வமே ஆடு மாடுதான்.



# கோழி வளர்ப்பு பெண்களுக்கான சிறுதொழில்...

அரிபிரியா *

எனது பெயர் கோமதி. நான் நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடியில் 15 வருடங்களாக கோழி வளர்த்து வருகிறேன். நமக்கெல்லாம் வீடு எப்படியோ, அது மாதிரிதான் கோழிகளுக்கும் கோழி வீடு என்று ஒன்று உள்ளது, அதை கோழி கூண்டு என்றும் அழைக்கிறோம். ஒரு கூட்டுக்குள் 15 கோழிகள் வரை அடைப்போம், அதை நாய், நரி, பூனைகளால் பாதிப்பு வராமல் இருக்க, நான்கு குழாய்கள் வைத்து தூக்கி உயரமாக கட்டுவார்கள். நான் எங்கள் வீட்டில் எண்பது கோழிகளை வளர்த்து வருகிறேன். சொந்தமாக மூன்று கோழிக்கூண்டுகளையும் வைத்துள்ளேன்.

கோழிகளுக்கு தேவையான அரிசி, நொய், சோளம், பழைய சோறு, கோழித்தீவனம் போன்றவைகளை தீவனமாக கொடுப்பார்கள். கோழிகள் முட்டை விட்டதும் அதை வீட்டிற்கும் பயன்படுத்துவார்கள். கடைகளில் விற்கவும் செய்வார்கள். கோழி முட்டையை அடைகாக்க வைத்து குஞ்சி பொறிக்க வைப்பார்கள். அடைகாக்க, ஒரு பாத்திரத்தில் மணல் வைத்து வேப்பிலை பச்ச மிளகாய், இரும்பு நொச்சியிலை வைத்து, அதில் முட்டைகளை வைப்பார்கள். சுமார் 18 நாட்கள் கழித்து முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரும். சில முட்டைகள் பொறிக்காமல் இருக்கும், அவைகளை எடுத்து எறிந்து விடுவோம். சில முட்டைகள் சேவலாக இருக்கும் அதை விற்பனை செய்துவிடுவோம். பெட்டை கோழிகளை முட்டைக்காக வைத்துக் கொள்வோம். சில சேவல்களை கோவிலுக்கு வேண்டுதலுக்காக விடுவதும் உண்டு. கோழிகளை பண்ணைகளாகவும் வளர்ப்பது உண்டு. கோழிப் பண்ணைகளை பொருத்தவரையில் பண்ணைக்கு ஏற்றவாறு 400 முதல் 600 கோழிக் குஞ்சுகளை வளர்த்து வருகிறார்கள். கோழிகளை அடைப்பதற்கு கூண்டுகள் கட்ட 5,000 ரூபாய் வரை செலவாகும். மேலும் ஒரு நாளுக்கு கோழிகளுக்கு 7 முதல் 8 கிலோ வரை தீவனத்திற்கு செலவாகும். நன்கு வளர்ந்த கோழிகள் முட்டைகள் இட ஆரம்பிக்கும். அவ்வாறு இடும் முட்டைகளை 18 முதல் 21 நாட்கள் வரை வைத்து அடைகாத்து குஞ்சு பொறிக்க காத்திருக்கவேண்டும்.

கோழி முட்டைகளை நான் அருகிலுள்ள கடைகளில் விற்பது உண்டு. தினமும் 20 முதல் 25 முட்டைகள் வரை நான் விற்பனை செய்வேன். இதன் மூலம் ஒரு நாளைக்கு எனக்கு நூறு ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். இதுதவிர கோழிகள் அதிக எண்ணிக்கையில் இருக்குமாயின், எங்கள் வீட்டிற்கு வியாபாரிகளை அழைத்து விற்பனை செய்வதும் உண்டு. கோழியின் உடல் எடையைப் பொறுத்து ஒரு கோழியை 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்வேன்.



* அரிபிரியா, வேட்டைகாரனிருப்பு

# நானும் ஓர் விவசாயியே.. ஓர் பெண் விவசாயியின் அறைகூவல்...

துர்கா *

என் பெயர் புஷ்பா. நான் நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடிக்கு அருகே உள்ள வானவன்மகாதேவி என்ற ஊரில் கடந்த 25 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறேன். பொதவாக விவசாயம் என்பது ஏதோ, ஆண்களுக்கு மட்டும்மே உரிய தொழிலாக கருதும் எண்ணம் இச்சமூகத்தில் உள்ளது. அது போல்; வீட்டில் சமைத்து கொடுப்பது மட்டும் பெண்களுக்கு உரிய பணியாக கருதும் எண்ணமும் பெருவாரியாக உள்ளது. ஆனால் பெண்கள் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் வீட்டில் கணவர் இறந்துவிட்டால் பெண்கள்தான் எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் மனைவி இறந்த குடும்பங்களில் கணவர் குடும்ப பொறுப்புகளை ஏற்க தயங்கும் சூழலே உள்ளது என்பதும் ஓர் உண்மை.

பொதுவாக எங்கள் ஊரில் நிலக்கடலை சாகுபடியை தொடர்ந்து கத்திரி, கொத்தவரங்காய், வெண்டைக்காய், பாகற்காய், புடலங்காய் போன்ற காய்கறிகளையும், கீரைகளையும் பயிரிட்டு வருகின்றனர். நானும் வீட்டிற்கு அருகிலேயே கத்திரி, வெண்டை, கொத்தவரங்காய், வெள்ளரி, தக்காளி, பாகற்காய் போன்ற விதவிதமான காய்கறிகளை சாகுபடி செய்து வருகிறேன். மேலும் எங்கள் பகுதிகளில் என்னை போன்ற பல பெண்கள் வயல்களில் நிலக்கடலை பயிர் சாகுபடியும் செய்கிறார்கள். பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருள்களையும் நாங்களே முன்னின்று ஒருங்கிணைத்து வருகிறோம்.

நாங்கள் எங்கள் வேளாண் விளை பொருட்களை அருகில் உள்ள கிராம சந்தைகளுக்கு சென்று விற்பனை செய்வோம். மீதமுள்ள விளைபொருட்களை நாகப்பட்டினத்தில் உள்ள காய்கறி மார்க்கெட்டில் விற்பனை



* துர்கா, புதுப்பள்ளி



செய்வோம். தற்போது நான் விளைவிக்கும் அனைத்து காய்கறிகளுமே நல்ல விலைக்கு செல்கின்றது. நான் எனது காய்கறிகளை கடைகளில் விற்பதால் 30,000 வரை வருமானம் வரும். இருப்பினும் இது என்னுடைய மூன்று மாத கால கடினமான உழைப்பினால் வந்த வருவாய். நான் எனது காய்கறிகளை விற்பனை செய்வதன் மூலம் ஒரு நாளைக்கு 300 ரூபாய் வரை வருமானம் ஈட்டுகிறேன். இவ்வாறும் வரும் வருமானத்தில் 100 ரூபாய் உர செலவிற்கும் 50 ரூபாய் போக்குவரத்து செலவிற்கும் போக 150 ரூபாய் நிகர லாபமாக கிடைக்கும்.

சேமிப்பு என்று பார்க்கும் பொழுது நான் தினமும் ஐம்பது ரூபாயை எங்கள் அருகில் உள்ள தபால் நிலையத்தில் தவணையாக செலுத்தி வருகிறேன். மேலும் நான் எங்கள் கிராமத்தில் ஒரு முகவரிடம் தவணை சீட்டு எடுத்து வைத்திருக்கிறேன். இதன் மூலம் நான் என் வீட்டிற்கு தேவையான பொருட்களை மொத்தமாக வாங்கிக் கொண்டு அவருக்கு தினமும் தவணை முறையில் கடன் அடைத்து வருகிறேன். இது மட்டுமல்லாது, எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்டு கொண்டுவரும் மாத சம்பளத்தை, நான் வீட்டில் பாதுகாப்பாக வைத்து வீட்டிற்கு தேவையான பொருட்கள் மின்சார கட்டணம், தொலைக்காட்சி கட்டணம், வார அல்லது மாத தவணை முறையில் சீட்டு கட்டுதல் போன்ற வீட்டிற்கு தேவையான பணிகளை முன்னின்று செய்து வருகிறேன். இது மட்டுமா வருடத்திற்கு ஒருமுறை வங்கிகளில் எனது நகைகளை வைத்து கடன் பெற்று கால்நடைகளை வாங்கி, கால்நடை வளர்ப்பையும் கூடுதல் தொழிலாக செய்து வருகிறேன்.

பொதுவாக பெண்கள் வீட்டில் சும்மா தான் தொலைகாட்சி பார்த்துக் கொண்டிருப்பாதாக அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் எங்கள் நிலைமை அப்படி இல்லை நாங்கள் வீட்டில் இருந்து கொண்டு வீட்டு வேலையையும் பார்க்கிறோம், வீட்டிற்கு தேவையான கூடுதல் வருமானத்தை பெறும் குறு விவசாயம், கால்நடை வளர்ப்பு என்று ஏதேனும் ஒரு தொழிலை செய்து வருகிறோம். இதில் நகர்புற பெண்கள், கிராமப்புற பெண்கள் என்ற பாகுபாடு இல்லை, நகர்புற பெண்களும் தங்களால் இயன்ற ஏதேனும் பணி செய்து குடும்பத்திற்கு வருமானத்தை ஈட்டுபவளாகவே இருக்கிறார்கள் என்பதை இந்த கட்டுரை வாயிலாக தெரியப்படுத்த விரும்புகிறேன்.



# எங்க ஊரு அமேசான்...

நித்யா *

என் பெயர் பரிமளா எங்கள் ஊரில் மார்க்கெட் எல்லாம் கிடையாது எங்களுக்கு எல்லாம் சந்தை தான். நாங்கள் மார்க்கெட் போக வேண்டுமென்றால் நாகப்பட்டினம் அல்லது வேதாரண்யம் போகவேண்டி இருக்கும், ஆனால் எங்கள் முன்னோர்கள் அவர்கள் காலங்களிலேயே ஒவ்வொரு ஊரிலும் சந்தை என்ற வணிக முறையை அமைத்து நடத்தி வந்துள்ளார்கள். இப்போதும், இந்த உயரிய தொழில்நுட்ப காலங்களில் வீட்டில் இருந்து கொண்டு, அலைபேசியின் வழியே தங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும், ஏன் உணவையுமே தங்கள் வீட்டிற்கே வரவழைக்கும் நுகர்வோர் கலாச்சாரம் பெருகி வரும் வேளையிலும், எங்கள் கலாச்சாரமாகிய வார சந்தை முறையை நாங்கள் கைவிடுவதில்லை.

எங்களுக்கு இன்னும் எங்கள் ஊரில் நடக்கும் சந்தை தான் எல்லாமே. சந்தை என்றால் ஒரு நாள் முழுவதும் இருக்கும் என்று எண்ணிவிடாதீர்கள், எங்கள் ஊர் சந்தை இரண்டு முதல் நான்கு மணி வரை மட்டுமே இருக்கும். எங்கள் ஊராகிய விழுந்தமாவடியில் வெள்ளிக்கிழமை சந்தை இருக்கும். அதாவது ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் விழுந்தமாவடி சந்தை இருக்கும், இச்சந்தையில் காய்கறிகள், மளிகை சாமான்கள், மண்பானைகள், மண்சட்டிகள் போன்ற வீட்டு உபகரணங்கள் அனைத்தும் கிடைக்கும். எங்கள் ஊர் சந்தையில் மிகவும் பிரசித்தி பெற்ற பொறி உருண்டை விற்பார்கள் அவற்றை வாங்கவே பிள்ளைகள் சந்தைக்கு அடம்பிடித்து வருகிறார்கள்.

இதேபோல் எங்களது பக்கத்து ஊரான புதுப்பள்ளியில் வியாழக்கிழமை சந்தை இருக்கும் அதாவது ஒவ்வொரு வாரமும் பிரதி வியாழக்கிழமை புதுப்பள்ளியில் சந்தை இருக்கும். அதேபோல் வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் செவ்வாய்க்கிழமை வார சந்தை இருக்கும். இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் வாரம் ஒரு நாள் அருகருகே சந்தைகள் செயல்படும். ஏனென்றால் வெள்ளிக்கிழமை சந்தைக்கு செல்ல முடியாமல் இருப்பவர்கள், செவ்வாய் சந்தை அல்லது வியாழன் சந்தையில் அவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வார்கள். இவ்வாறு எங்கள் ஊரை சுற்றியுள்ள கிராமங்களில் மூன்று வார சந்தைகள் இருக்கின்றன.

* நித்யா, வெள்ளப்பள்ளம்



இந்த வார சந்தைகள் பொருட்களை வாங்குவதற்கு மட்டுமன்று, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் இடமாகவும் உள்ளது. இந்த சந்தைகளில் எங்கள் சுற்று வட்டார கிராமங்களிலிருந்து விவசாயிகள், அவர்களின் விளைபொருட்களை இந்த சந்தைகளில் கொண்டுவந்து விற்பனை செய்கிறார்கள். பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் எல்லோரும் வேப்பங்கொட்டை, புளியங்கொட்டை, முந்திரிக்கொட்டை, இலுப்பைகொட்டை ஆகியவற்றை விளையாட்டாக சேகரித்து, அவற்றை காயவைத்து உடைத்து அதைக்கொண்டு வந்து சந்தையில் விற்று அவர்களுக்கு தேவையான திண்பண்டங்கள் மற்றும் பொருட்களை வாங்கிக் கொள்வார்கள்.

பெண்களும் தங்களுக்கு தேவையான வளையல், பாசிமணி, தோடு வகைகள் மற்றும் அலங்கார பொருட்களை சந்தையில் வாங்கிச் செல்வார்கள்.

தற்போதுள்ள வாலிபர்களும், இளைஞர்களும் இந்த சந்தைகளை பயன்படுத்துதலில் விதிவிலக்கு இல்லை. அவர்களும் இதுபோன்ற சந்தைக்குச் சென்று தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி வருகின்றனர்.

வயலும் மாட்டுவண்டி வைத்திருப்பவர்களும் தங்கள் மாடுகளுக்கு லாடம் கட்ட சந்தைக்கு மாடுகளைப் பிடித்துக் கொண்டு வருவார்கள்

எங்களைப் பொறுத்த வரையில் அமேசான், பிளிப்கார்டு, ஸ்னாப்டீல் என்றால் இன்றுவரை எங்கள் ஊரைச் சுற்றி நடக்கும் இந்த மூன்று வார சந்தைகளே.

# மஞ்சள் நீராட்டு விழா...

ரஞ்சிதா *




தமிழ் கலாச்சாரத்தில், சங்க தமிழ் புலவர் நச்சினார்கினியார் பெண்களின் பருவத்தை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் என்று மிகச்சிறப்பாக வரையறை செய்துள்ளார். பெண்களின் அனைத்து பருவங்களுமே புனிதமானதாக கருதப்படுகிறது. குறிப்பாக மங்கை பருவதில் பெண்கள் பூப்படையும் நிகழ்வு மிகவும் புனிதமாகவே கருதப்படுகிறது. இங்கே ஓர் மங்கை தனது கிராமத்தில் பெண்கள் பூப்படையும் நிகழ்வு எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்று நம்மிடையே பகிர்ந்து கொள்கிறார்கள்.

எங்கள் ஊர் விழுந்தமாவடி. எங்கள் ஊரில் பூப்படைந்த பெண்களுக்கு பத்து நாட்களாக திருவிழா மாதிரிதான் சடங்குகள் நடைபெறும். முதல் நாள், ஊரில் உள்ள சொந்த பந்தங்களை வரச் சொல்லி, பூப்படைந்த பெண்ணை நீராட்டி, அவர்களுக்கு புத்தாடை கொடுத்து அலங்காரித்து இனிப்புகள் கொடுப்பார்கள். இன்றளவும் பூப்படைந்த பெண்ணை தனி அறையில் உட்கார வைத்து ஆண்கள் யாரும் பார்க்காத அளவிற்கு பார்த்து கொள்வார்கள். பூப்படைந்த பெண்ணுக்கு மதியம் ஒரு வேளை மட்டும் தான் சமைத்த உணவை கொடுப்பார்கள். காலை, மாலை இரு வேளையும் டீ, பிஸ்கட், அரிசிகலி, அரிசி புட்டு போன்ற ஊட்டச்சத்து கொண்ட சிற்றுண்டிகளையே கொடுப்பார்கள். தொடர்ந்து 10 நாட்கள், நல்லெண்ணெய், முட்டையை காலையும், மாலையும் குடிக்க கொடுப்பார்கள். தினமும் ஊரில், பக்கத்து வீட்டில் உள்ள மக்களை வரச்செய்து பூப்படைந்த பெண்ணை உட்கார வைத்து கும்மி பாட்டு பாடுவார்கள். 21 நாட்களுக்கு பிறகு பத்திரிக்கை அடித்து தாய்மாமன் மற்றும் ஊரில் உள்ள மக்களுக்கு கொடுத்து மஞ்சள் நீராட்டுக்கு வருமாறு அழைப்பார்கள். சொந்தபந்தங்கள் எல்லாரும் பூப்படைந்த பெண்ணிற்கு புது துணி, சர்க்கரை, வாழைப்பழம் போன்ற வகையான ஸ்வீட்கள் வாங்கிக்கொடுப்பார்கள். பூப்படைந்த பெண்களை அலங்காரம் செய்து பள்ளாக்கில் அமரச் செய்து ஊர்வலம் சுற்றி வருவார்கள். இந்த நிகழ்வின் வழியே சமுகத்திற்கு, அந்த பெண் பூப்படைந்தது திருமணத்திற்கு தயாராக இருக்கிறாள் என்று அறியச் செய்கிறார்கள்

* ரஞ்சிதா, புதுப்பள்ளி

# கடலுக்குள் செல்வோரின் குடிப்பழக்கம்...

பாத்திமா *



வணக்கம் என் பெயர் வகோபால்சாமி. நான் ஒரு மீனவன். எனக்கு மூன்று பெண் குழந்தைகள் மற்றும் 2 ஆண் குழந்தைகள். ஆண் குழந்தைகளுக்கு திருமணம் நடத்தி வைத்து மேலும் இரு பெண்களுக்கும் திருமணம் நடத்தி வைத்தேன். இன்னும் ஒரு பெண் குழந்தை மட்டும் கல்லூரி முடித்துவிட்டு பள்ளியில் தற்காலிகமாக பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறார். எனக்கு தற்போது 60 வயது ஆகிறது. நான் எனது பத்தொன்பதாவது வயதில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல ஆரம்பித்துவிட்டேன். அன்றிலிருந்து இன்றுவரை நான் எனது வாழ்வாதாரத்திற்காக கடலுக்குள் தினமும் சென்று கொண்டுதான் இருக்கிறேன். இவ்வளவு நாள் எனது பிள்ளைகளுக்காக நான் கடலுக்குள் சென்றேன். இப்போது நான் அவர்களை எல்லாம் படிக்க வைத்து விட்டு திருமணம் செய்து வைத்துள்ளேன். இருப்பினும் எனது மகன்கள் இருவரும் படித்திருந்தாலும் கூட, எனது தொழிலான மீன்பிடி தொழிலையே செய்ய வேண்டும் என்று ஒரு வைராக்கியத்தோடு கடலுக்குள் சென்று வருகிறார்கள்.

நாங்கள் எங்கள் மீன்பிடித் தொழிலையும் கடலையும் தெய்வமாக மதிப்பவர்கள். ஆதலால் கடலுக்குள் செல்லும் போது, எந்த ஒரு தவறான செயலையும் செய்ய மாட்டோம். இந்த 40 வருட மீன்பிடி வாழ்க்கை எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தாலும், எனக்கு கடல் நிறைய விஷயங்களை சொல்லிக் கொடுத்திருக்கிறது. கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழில் செய்து வருவது என்பது

* பாத்திமா, பி.ஆர்.புரம்



ஒரு நிரந்தரம் இல்லாத வாழ்க்கை. நாங்கள் கடலுக்குள் போகும் போது கரைக்கு திரும்பி வருவோம் என்பதற்கு எந்த ஒரு உத்திரவாதமும் இல்லை. இரண்டு அல்லது மூன்று நாள் கூட நடுக்கடலில் தங்கி ஆழ்கடல் மீன் பிடிப்பதும் உண்டு. நாங்கள் மீன்பிடித் தொழிலுக்கு படகில் கடலுக்குள் சென்று கரை திரும்பும் வரையில், எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் சாமி கும்பிட்டுக் கொண்டு இருப்பார்கள். நாங்களும் கரை சேர்ந்து வீடு திரும்பி எங்கள் மனைவி மக்களை பார்த்த பின்பு தான் எங்களுக்கு சந்தோசமும் ஏற்படும். இத்துடன் மீன் பிடிப்பில் ஏற்பட்டுள்ள உடம்பு வலி எங்கள் உயிரையே எடுக்கும் அளவிற்கு இருக்கும். இரண்டு அல்லது மூன்று நாள் கடலுக்குள் தூக்கமில்லாமல், முறையான உணவு இல்லாமல் மீன்பிடிப் படகில் இருந்து வந்தமையால் கை கால்களில் அதிக வலி ஏற்படும். அலைகளினால் படகு குலுங்கும் போது உடம்பு வலி இன்னும் அதிகமாக இருக்கும். இவ்வாறு எங்களுக்கு மீன்பிடி தொழிலால் ஏற்படும் உடல் வலியை மறக்கவே சிறிதளவு சாராயம் எடுத்துக்கொள்வோம். எங்களுக்கு இந்த உடம்புவலி நாங்கள் அருந்தும் சாராயத்தின் மூலமாக சிறிதளவு குறைகிறது. கடலுக்குள் போகும் அனைத்து மீனவர்களும் பெரும்பாலும் மது அருந்துவோர் ஆகவே இருக்கிறோம். பொதுவாக மது அருந்தினால் வீட்டில் உள்ள அனைவரும் குடிப்பழக்கம் உள்ளவரை திருத்த பார்ப்பார்கள் அல்லது குடிப்பழக்கத்திலிருந்து மீண்டு வர திட்டுவார்கள். ஆனால் மீனவர் சமுதாயங்களில் அப்படி கிடையாது ஏனெனில் நாங்கள் எங்கள் உடல் வலி நீங்குவதற்காகவே குடிப்பழக்கம் மேற்கொண்டு இருக்கிறோம் என்பதை எங்கள் குடும்ப உறுப்பினர்களும் அறிவார்கள்.



# எங்கள் ஊர் மீன்பிடித் திருவிழா...

ரவிதா *

மீன்பிடித் திருவிழா, கடலோர கிராமங்களில் அனைத்து குடும்பங்களும், சாதி மத வேறுபாடின்றி கொண்டாடும் ஓர் திருவிழா. நாகை மாவட்டம், வேட்டைகாரனிருப்பு கிராமத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மீன்பிடித் திருவிழா முறைகள் பற்றி நம்மிடையே பகிர்ந்து கொள்கிறார் திரு.சரண்.

என் பெயர் சரண், எங்கள் ஊர் வேட்டைக்காரனிருப்பு, நாகப்பட்டிணம் மாவட்டம். எங்கள் ஊரில் மாவடிகுளம் என்ற ஓர் சிறிய குளம் ஊர் மத்தியில் அமைந்துள்ளது. நாங்கள் ஊர் மக்கள் அனைவரும் இணைந்து, ஒவ்வொரு வீட்டிலிருந்தும், வரி வசூல் செய்து அதன் மூலம் வரும் வருமானத்தை கொண்டு மாவடிகுளத்தில் மீன்கள் வாங்கி விட்டு வளர்க்கிறோம். குறிப்பாக கட்லா, ரோகு, மிராகால், கெண்டை, விறால் போன்றவற்றை மழைக்காலங்களில் வாங்கி இக்குளத்தில் வளர்க்கப்படுகின்றன. இவ்வகை மீன்கள் அனைத்திற்கும் உணவாக தத்தம் வீட்டில் பயன்படுத்தும் எஞ்சிய காய்கறிகள் மற்றும் உணவு வகைகளை உணவாக அளிப்பார்கள். ஊர் தலைவர்கள், மீன்களை பராமரிக்க ஒரு நபரை தேர்வு செய்து நியமனம் செய்கின்றனர். இந்த நபர் மீன்களின் பராமரிப்பு மற்றும் உணவு பொருட்களை பாதுகாப்பான முறையில் மீன்களுக்கு வழங்குவார். இதன் மூலம் மீன்கள் வேகமாக வளர்ந்து முழு வளர்ச்சியை அடைகின்றன.

ஆண்டிற்கு ஒரு முறை கோவில் திருவிழாவின் போது மீன்பிடி திருவிழா நடைபெறுவது வழக்கம். கோவில் திருவிழாவின் முதல் நாள் மீன்கள் வளர்ச்சியடைந்துள்ளதை உறுதி செய்து ஊர் கூடி, மீன் வளர்த்தவரை வணங்கி கவுரவப்படுத்துவார்கள். வருடாவருடம் சித்திரை முதல் நாள் மீன்பிடி திருவிழாவானது காலை பத்து மணியளவில் தொடங்கி மாலை மூன்று மணியளவில் முடிகிறது. இக்குளத்தில் பிடிக்கும் மீன்கள் அனைத்தும் வீட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு சமைத்து, மீண்டும் கோவிலுக்கு கொண்டு வந்து சாமிக்கு படையல் செய்யப்படுகிறது. அதன் பிறகு வீட்டிற்கு சென்று அனைவரும் மீன்களை உணவாக உட்கொள்கிறார்கள். வருடந்தோறும், மீண்டும் அக்குளத்தை சுத்தம் செய்து புதிதாக தண்ணீரை நிரப்பி, மழைக்காலங்களில் வரும் தண்ணீரை சேமித்து, மீன்களை வாங்கி மீண்டும் வளர்த்து, எங்கள் ஊர் மீன்பிடித்திருவிழாவை மிகச்சிறப்பாக கொண்டாடி வருகின்றோம்.

* ரவிதா, வேட்டைக்காரனிருப்பு

# கோடியக்கரை ...

அரிபிரியா *

எல்லா ஊர்களிலும் எத்தனையோ சுற்றுலாத் தளங்கள் இருக்கலாம். ஆனால் எங்கள் ஊரில் காடுதான் சுற்றுலாத்தலம். அந்த காடு பல பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் வாழ்விடமாக திகழ்கிறது. அதனால் தான் அந்த ஊரின் பெயரே கோடியக்காடு. அது காலப்போக்கில் கோடியக்கரை என ஆனது. தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கோரமண்டல் கடற்கரையில் தாழ்ந்த தலைப்பகுதியாகும். இது இயற்கை காடுகளால் சு+ழப்பட்டுள்ளது மற்றும் ராமாயணத்துடன் நெருக்கமாக தொடர்புடையது. ராமரின் கால்களைக் காணும் இடமும், இலங்கையை (48 கி.மீ) காணக்கூடிய பழைய லைட் ஹவுஸூம் இங்கு உள்ளது. இது ஒரு அற்புதமான பறவைகள் சரணாலயமாகும். இது வேதாரண்யத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. இங்கு வெவ்வேறு வகையான பறவைகள், மான்கள், குரங்குகள் போன்ற விலங்குகளும் வசித்து வருகின்றன.


இந்த சரணாலயம் 1967 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒரு பாலூட்டி இனமான புல்வாய் மிருகத்தை (பிளாக்பக்) அருகும் தருவாயில் இருந்து பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது. இந்த சரணாலயத்தின் 7 சதுர கிலோமீட்டர் மையப்பகுதி தேசிய பூங்காவாக முன்மொழியப்பட்டுள்ளது. இந்த சரணாலயம், 1988 ஆம் ஆண்டில், வேதாரண்யம் சதுப்பு நிலம் மற்றும் தலைஞாயிறு காப்பு காடுகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்;டு பாயிண்ட் கலிமியர் வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் என மறுபெயரிடப்பட்டது. பாயிண்ட் கலிமியரின் மொத்த பரப்பளவு 377 சதுர கி.மீ. ஆகும். மேலும்

* **அரிபிரியா**, வேட்டைகாரனிருப்பு



இது இந்தியாவில் கரண்டி வாய உள்ளான்களின் (சாண்ட்பைப்பர்) சில குளிர்கால இடங்களில் ஒன்றாகும். இது இந்தியாவில் பெரிய அளவில் குளிர்கால பூநாரைகளையும் (ஃபிளமிங்கோக்கள்) கொண்டுள்ளது. ஆகஸ்ட் 2002 முதல் கோடியக்கரை ராம்சார் சாசன தளமாக நியமிக்கப்பட்டுள்ளது. பாயிண்ட் கலிமேரின் காடுகள் வேதாரண்யம் காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இங்கு ராமர் பாதம் இன்றுவரையில் அழியாமல் உள்ளது. சீதையை இலங்கைக்கு கடத்திச் சென்றபோது ராமர் கோடியக்காடு பகுதியில் நின்று இலங்கையை பார்த்ததாக இன்றுவரை நம்பிக்கையுடன் கூறப்படுகிறது. அவரது பாதத்தை சுற்றுலா வரும் அனைவரும் பார்த்து செல்கின்றனர். இங்கு மழை காலம் தொடங்கியவுடன் பலவிதமான பறவைகளும் வெளிநாடுகளிலிருந்து பல ஆயிரம் கிலோமீட்டர் பயணித்து இங்கு வந்து தங்கி வாழ்கின்றன. பல்வேறு வகையான மரங்களும் இங்கு உள்ளன. அடர்ந்த காடுகளாகவும் மழைப்பொழிவு அதிகமாகவும் இருப்பதால் பறவைகள் பல நாடுகள் கடந்து இங்கு வருகின்றன. இதில் மூன்று இயற்கை வாழ்விடங்கள், எப்போதும் வறண்ட பசுமையான காடுகள், சதுப்புநில காடுகள் மற்றும் ஈரமான நிலங்கள் உள்ளன. அன்று முதல் இன்று வரை இந்த பயணங்கள் தொடர்ந்து நடைபெற்று கொண்டே வருகிறது. இது சுற்றுலாத் தலமாக உள்ளதால், இங்கு சுற்றுலாவை அடிப்படையாக கொண்டு பல மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.





## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.


மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org